1973 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதுரை மாநகராட்சிச் சட்டம் 1971-ல் தொழில் வரியை, பணியாளரின் ஊதியத்தில் கழிவு செய்து, அதனை மாநகராட்சி அதிகாரியிடம் செலுத்த வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அம்முறையை சென்னை மாநகராட்சி சட்டம் 1919-லும், தமிழ்நாடு நகராட்சிச் சட்டம் 1920-லும் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1958, பிரிவு 121 கீழ் வேலை கொடுப்பவர் தொழில் வரிக்குட்பட்ட பணியாளரின் குடியிருப்பு முகவரியைத் தெரிவிக்க வேண்டுமெனவும், உள்ளாட்சி அதிகாரிக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியினைப் பணியாளரின் சம்பளத்திலோ அல்லது ஊதியத்திலோ பிடித்தம் செய்து அதனை மேற்கூறிய அதிகாரியிடம் செலுத்த வேண்டுமென விதிகள் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் தேவையான மாற்றங்கள் விரைவில் செயலாக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the fact that so many new taxes have come up and the total amount of the professional tax collected is so small and also the collection charges are so high, will the Government think of dropping the professional tax completely, as many other State Governments are reported to have done ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

மெரீனா கடற்கரையருகே சுரங்கப் பாதை

***233 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர் மெரீனா கடற்கரைச் சாலையில் சுரங்கப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அச் சுரங்கப் பாதையை ரூ. 7.67 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை மாநகராட்சி மன்றம் அமைக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: அந்தச் சுரங்கப் பாதையினுடைய வேலை எப்பொழுது துவங்கும், எப்பொழுது முடிவுறும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவ் வேலையைச் செய்ய ஒப்பந்த மனு பெறப்பட்டு அது தொடர்பான நெடுஞ்சாலை கிராமப் பணித் தலைமைப் பொறியாளருடைய அறிவுரை எதிர் பார்க்கப்படுவதாக சென்னை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னையில் இப்படிப் பல இடங்களில் நெரிசல் இருக்கிறது. எங்கெல்லாம் சப்வே அமைப்பது என்று ஏதாவது இன்வெஸ்டிகேஷன் நடத்தப்பட்டிருக்கிறதா? இப்படியிருந்தால் மற்ற இடங்களிலும் இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எங்கெல்லாம் நெரிசல் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் நெரிசல் ஏற்படுகின்ற பகுதிகளாக அறிவிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: அண்ணா சாலை நெரிசலைத் தவிர்ப்பதற்கு ஜெமினியிலிருந்து பிராட்வே வரையில் ஒரு நீண்ட சுரங்கப் பாதை அமைக்கின்ற யோசனையிருப்ப அரசாங்கத்தினிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்சமயம் ஒன்றும் இல்லை.

New buildings in Thousand Lights area.

* 234 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Madras Corporation has proposed to construct buildings at Thousand Lights in Madras; and

(b) if so, the details thereof?